| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| இணை இயக்குநர் (மேல்நிலை),<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | அனைத்து அரசுத் தேர்வுகள்<br>உதவி இயக்குநர்கள் |

ந.க.எண்.008507/ எச்1 /2024 நாள்.12.06.2024

ஐயா/அம்மையீர்,

பொருள் : சென்னை–06 – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டு துணைத்தேர்வு – ஜூன்/ஜூலை–2024 – மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு மார்ச்/ஏப்ரல்–2024–ல் பெற்ற சலுகையையே பயன்படுத்திக் கொள்ளல்– புதியதாக சலுகைகள் கோரும் மாற்றுத்திறனாளி தேர்வர்களின் விவரங்களை மட்டும் சரிபார்த்து தொகுத்து பரிந்துரைப்பட்டியலை அனுப்பக் கோருதல் – தொடர்பாக.

பார்வை : அரசாணை (நிலை) எண்.62, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள்.25.03.2022

*****

நடைபெறவுள்ள ஜூன்/ஜூலை–2024 மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாமாண்டு துணைத்தேர்விற்கு மாற்றுத்திறனாளி சலுகைகள் கோரி விண்ணப்பிக்கும் மாற்றுத்திறனாளி தேர்வர், ஏற்கனவே மார்ச்/ஏப்ரல் 2024 மேல்நிலை பொதுத்தேர்வின்போது மாற்றுத்திறனாளி சலுகைகள் பெற்றவராயிருப்பின், அத்தேர்வருக்கு மார்ச்/ஏப்ரல் 2024–ல் பெற்ற மாற்றுத்திறனாளி சலுகைகளையே பயன்படுத்திக் கொள்ளலாம் (எதிர்பாராத விபத்தினால் பாதிக்கப்பட்டு சலுகைகள் பெற்றவர்களுக்கு இது பொருந்தாது) என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்டவாறு இல்லாமல், புதியதாக ஜூன்/ஜூலை 2024 மேல்நிலை துணைத்தேர்விற்கு மாற்றுத்திறனாளி சலுகைகள் கோரும் தேர்வர்களின் விண்ணப்பங்களுடன் பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ்கள் மற்றும் இணைப்புகளை நன்கு ஆய்வு செய்து, சலுகை கோரிய தேர்வர்கள் அனைவரும் பார்வையில் காணும் அரசாணையின்படி, சலுகைகள் பெற தகுதியுடையவரா என்பதை உறுதி செய்திட வேண்டும். தகுதியற்ற மற்றும் அரசாணையில் குறிப்பிடப்படாத மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு தேர்வெழுத சலுகைகள் வழங்குமாறு அரசுத் தேர்வுகள் உதவி

இயக்குநர்கள்/ மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் பரிந்துரை செய்தல் கூடாது.

அதன்பின், மேல்நிலை துணைத் தேர்வெழுத சலுகை கோரும் தகுதியுள்ள தேர்வர்களின் விவரங்களை இணைப்பிலுள்ள மாதிரிப் படிவத்தின் படி (**Excel–ல், UNICODE (TAU–MARUTHAM) Font–ல்**) தயாரித்து, "மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள சலுகை கோரும் மாற்றுத்திறனாளித் தேர்வர்களது விண்ணப்பங்களையும், அவற்றுடன் இணைக்கப்பட்ட தகுதிச் சான்றுகளையும் நன்கு ஆய்வு செய்த பின்னரே இயக்குநரிடம் பரிந்துரைக்காக அனுப்பப்படுகிறது" என்ற சான்றொப்பமிட்டு, அப்பட்டியலை **(உரிய மருத்துவச் சான்று நகல் இணைப்புகளுடன்),** அரசுத் தேர்வுகள் இயக்கக இணை இயக்குநர் (மேல்நிலை) அவர்களுக்கு அனுப்ப வேண்டும். மேலும், **அப்பட்டியலின் soft copy ஒன்றினை மேல்நிலை இரண்டாம் ஆண்டு எனில்** dgeh1sec@gmail.com என்கின்ற இணையதள முகவரிக்கும், **மேல்நிலை முதலாம் ஆண்டு எனில்** dgef1sec@gmail.com என்கின்ற இணையதள முகவரிக்கும் 18.06.2024–க்குள் அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், மேற்கண்ட நாட்களுக்கு பிறகு பெறப்படும் மாற்றுத்திறனாளி சலுகைகள் கோரும் விண்ணப்பங்களுக்கு சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் / மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அளவிலேயே உரிய சலுகைகள் வழங்கி பின்னேற்பாணை பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு :**

1. மாதிரிப்படிவம்.
2. பார்வையில் காணும் அரசாணையின் நகல்
3. மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு வழங்கப்படும் சலுகை விவரங்கள் அடங்கிய பட்டியல்

ஒம்/–
**இணை இயக்குநர் (மேல்நிலை)**

**நகல்.**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்